**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 363** **நாள் : 06.11.2025**

**மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்ரமணியன் அவர்கள், அடையாறு மண்டலம், வார்டு-169க்குட்பட்ட பகுதிகளில் ரூ.7.47 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள சலவைக் கூடம் மற்றும் வாசிப்பு மண்டலத்தினை திறந்து வைத்தார்.**

மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்ரமணியன் அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி, அடையாறு மண்டலம், வார்டு-169க்குட்பட்ட பகுதிகளில் ரூ.7.47 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள சலவைக் கூடம் மற்றும் வாசிப்பு மண்டலத்தினை மக்கள் பயன்பாட்டிற்கு இன்று (06.11.2025) திறந்து வைத்தார்.

அடையாறு மண்டலம், வார்டு-169, ஜோதியம்மாள் நகரில் பெருநகர சென்னை மாநகராட்சியின் மூலதன நிதியின் கீழ் ரூபாய் 4.65 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட சலவைக் கூடத்தின் கட்டடத்தினை திறந்து வைத்து. இக்கட்டடத்தின் அருகிலேயே செயல்பட்டு வரும் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நூலக கட்டடத்தில் புத்தகம் வாசித்துக் கொண்டிருந்த மாணவர்களிடம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கலந்துரையாடி நூலகத்தின் வசதிகள் குறித்து கேட்டறிந்தார்.

இதனைத் தொடர்ந்து, வேளச்சேரி பிரதான சாலையில் உள்ள ஹாமில்டா பூங்காவில், பெருநகர சென்னை மாநகராட்சியின் மூலதன நிதியின் கீழ் ரூபாய் 2.82 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட வாசிப்பு மண்டலத்தினை திறந்து வைத்து, வாசிப்பு மண்டலத்தில் வைக்கப்பட்டுள்ள புத்தகங்கள் மற்றும் வசதிகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பார்வையிட்டார்.

இந்நிகழ்ச்சியில், துணை மேயர் திரு.மு.மகேஷ்குமார், மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**